<u>சுருக்கம்</u>

பாசனம் – நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு வட்டம் – மொளசி கிராமத்தில் காவிரி ஆற்றிலிருந்து குடலை கிணறு அமைத்து பாசனம் செய்து வரும் குப்பிரிக்காபாளையம், ராக்கியவலசு மற்றும் தேவம்பாளையம் – சிறுவிவசாயிகள் பாசன சங்கங்களை அரசு வரன்முறை செய்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

<u>பொதுப்பணித்(என்.1) துறை</u>

அரசாணை (நிலை) எண். 62 நாள். 18.2.2010

திருவள்ளுவர் ஆண்டு 2041

மாசி 6

<u>மீண்டும் படிக்க:-</u>

1. அரசாணை (நிலை) எண்.278, பொதுப்பணித்துறை, நாள். 29.7.2002.
2. அரசாணை (நிலை) எண். 343, பொதுப்பணித்துறை, நாள். 11.9.2002.
3. அரசாணை (நிலை) எண். 331, பொதுப்பணித்துறை, நாள். 12.10.2007.

<u>மேலும் படிக்க:-</u>

4. திருச்செங்கோடு திரு.இ.இராஜமாணிக்கம் மனு நாள். 11.9.2007.
5. திருச்சி மண்டல தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம் கடித எண். 676/அரசு/இவஅ–1/கோ–24/பொது/2007 நாள். 21.9.2007 மற்றும் 24.6.2009.
6. மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் கடித எண். 9142/2006/அ6 நாள். 3.4.2008.
7. முதன்மை செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண். சி4/34276/2007 நாள். 12.5.2008.

-----

<u>ஆணை:-</u>

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம், மொளசி கிராமத்தில் 1. குப்பிரிக்காபாளையம் 2. ராக்கியவலசு, 3. தேவம்பாளையம் ஆகிய மூன்று நீரேற்றுப் பாசன சங்கங்களின் உறுப்பினர்கள் புல எண். 346–ல் குடலை கிணறு அமைத்து காவிரியிலிருந்து நீரேற்றம் செய்து வந்த நீரேற்று பாசன சங்கங்களை வரன்முறைப் படுத்தி ஆணை வெளியிடப்பட்டது. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கடைமடை நிலங்களுக்கு நீர் பற்றாக்குறை ஏற்படும் என்பதை கருத்திற்கொண்டு மேற்படி சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ஆணையினை ரத்து செய்து ஆணை வெளியிட்டது. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு நாமக்கல் மற்றும் பரமத்தி வேலூர் வட்டங்களில் உள்ள ஏழு நீரேற்று பாசன சங்கங்களுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

2. பார்வை நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் திரு.இராஜமாணிக்கம் திருசெங்கோடு அவர்கள் பத்தி 1ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏழு நீரேற்று பாசன சங்கங்களுக்கு அனுமதி வழங்கி வெளியிட்ட ஆணையின் அடிப்படையில் குப்பிரிக்காபாளையம், ராக்கியவலசு மற்றும் தேவம்பாளையம் சிறு விவசாயிகள் பாசன சங்கங்களை வரன்முறை செய்து அரசு ஆணையிட்டு ரத்து செய்ததை மீண்டும் பரிசீலித்து வரன்முறைப்படுத்தக் கோரியுள்ளார்.

3. பார்வை ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம் அவர்கள் மேட்டூர் அணை கடந்த ஜூலை 2007 முதல் ஐந்து

முறை நிரம்பி வழிந்தோடி தண்ணீர் தேவைக்கு அதிகமாகவே டெல்டா பாசன பகுதிக்கு சென்றுள்ளது எனவும், மொளசி கிராமத்தில் காவிரி ஆற்றிலிருந்து குடலை கிணறு அமைத்து பாசனம் செய்து வரும் குப்பரிக்காபாளையம், ராக்கியவலசு மற்றும் தேவம்பாளையம் சிறு விவசாயிகள் பாசனங்களின் மொத்த பரப்பு 675 ஏக்கர் ஆகும் எனவும், இந்த பாசன பரப்பிற்கு தேவைப்படும் தண்ணீர் வினாடிக்கு 7 கன அடி மட்டுமே என்றும் சுமார் 15000 கன அடி முதல் 20000 கன அடி தண்ணீர் பாசனத்திற்கு சென்று கொண்டு இருக்கும் நிலையில் 7 கன அடி தண்ணீரால் கடைமடை பகுதிகளில் அமைந்துள்ள ஆயக்கட்டு நிலங்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாது என்பதால் இப்பாசன சங்கங்களை முறையாக வரன்முறைபடுத்தலாம் என பரிந்துரை செய்துள்ளார். பார்வை ஆறில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் நாமக்கல் அவர்கள், மேற்படி நீரேற்றுப்–பாசன சங்கங்களுக்கு ரத்து செய்யப்பட்ட அனுமதியை மீண்டும் வழங்கினால் உருவாகும் சூழ்நிலையினை சட்டம் மற்றும் ஒழுங்கு ரீதியில் பரிசீலனை மற்றும் விசாரணை செய்ததில், மேற்படி, சங்கங்களுக்கு மீண்டும் அனுமதி அளித்தால் கீழ் பகுதியில் உள்ள விவசாயிகளோ, இதர நீரேற்று சங்கங்களோ ஆட்சேபனை தெரிவிக்க வாய்ப்பில்லை என்றும், ஆதலால் மேற்படி சங்கங்களின் குடலை கிணற்றில் மின்மோட்டர் வைக்க, ரத்து செய்யப்பட்ட அனுமதியினை மீண்டும் வழங்கலாம் என்றும், இது குறித்து நஞ்சை இடையார் கடைமடை ராஜா வாய்க்கால் பாசன சங்கத்தினரை 15.03.2008 அன்று விசாரணை செய்து அவர்களது கருத்து கேட்கப்பட்டதில் குப்பிரிக்காப்பாளையம், ராக்கியவலசு மற்றும் தேவம்பாளையம் நீரேற்று பாசன சங்கங்களுக்கு ஏற்கனவே அனுமதி அளிக்கப்பட்டு பின்னர் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றும், கடைமடை ராஜா வாய்க்கால் மூலம் சுமார் 600 ஏக்கர் நிலம் நேரடி பாசனத்தின் மூலம் பயனடைந்து வருகிறது என்றும், மேலே குறிப்பிட்ட மூன்று பாசன சங்கங்களும் வறட்சி மற்றும் காவிரியில் நீர் அல்லாத மற்றும் மேட்டூர் அணை மூடப்பட்ட காலத்தில் தண்ணீர் எடுக்கக் கூடாதெனவும், நீர்பாசனத்துக்காக தண்ணீர் அணையிலிருந்து திறந்து விடப்படும் காலங்களில் மட்டும் நீர் எடுத்துக் கொள்ளலாம் என்ற நிபந்தனைக்குட்பட்டு மேற்படி மூன்று சங்கங்களுக்கும் அனுமதி வழங்க ஆட்சேபனைகள் ஏதுமில்லை எனத் தெரிவித்து வாக்குமூலம் அளித்துள்ளனர் என நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் அறிக்கையின் அடிப்படையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

1. வறட்சி மற்றும் காவிரியில் நீரில்லாத காலத்திலும் தண்ணீர் எடுக்கக் கூடாது.
2. மேட்டூர் அணை மூடப்பட்ட காலத்தில் தண்ணீர் எடுக்கக் கூடாது.
3. நீர் பாசனத்திற்காக அணையிலிருந்து தண்ணீர், திறந்து விடப்படும் காலங்களில் மட்டும் நீர் எடுத்துக் கொள்ளலாம்.

4. பார்வை ஏழில் படிக்கப்பட்ட கடிதத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல் மாவட்டம், தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம் ஆகியோர்களின் பரிந்துரை அடிப்படையில் இம்மூன்று பாசன சங்கங்களை வரன்முறை செய்யலாம் என முதன்மை செயலாளர் மற்றும் நிலநிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

5. தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம், நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் முதன்மை செயலாளர் மற்றும் நிலநிர்வாக ஆணையர் ஆகியோரது பரிந்துரையின் அடிப்படையிலும் அரசு ஆலோசகர் மற்றும் தலைவர், காவிரி தொழில் நுட்பக் குழுமம் அவர்களின் கருத்தினை ஏற்றும், சிறுவிவசாய பாசன சங்கங்களை வரன்முறை படுத்தி ஏற்கனவே ஆணை வெளியிட்டதை கருத்திற்கொண்டும், இக்கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து, நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்தில் குப்பிரிக்காபாளையம், ராக்கியவலசு மற்றும் தேவம்பாளையம் சிறு விவசாயிகள் நீரேற்று பாசன சங்கங்கள், தங்களின் 675.00 ஏக்கர் புன்செய் நிலங்களுக்கு காவிரி ஆற்றின் கரையில் புல எண். 346–ல் குடலை கிணறு அமைத்து நீர் இரைத்து, மொளசி மற்றும் 6 கிராமங்களில் பாசனம் செய்து வரும் சங்கங்களை வழக்கமான நிபந்தனைகளுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

6. நிபந்தனைகள் விவரம் இவ்வாணையுடன் பிற்சேர்க்கையில் இணைக்கப்பட்டுள்ளது.

7. இவ்வாணை வருவாய்த்துறையின் அ.சா.எண். 6934/நிநி(2)/10–1, நாள். 16.2.2010–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மை தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும்
தலைமைப்பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.
தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம், திருச்சி–20.
முதன்மை செயலாளர் மற்றும் நிலநிர்வாக ஆணையர், சென்னை–5.
மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல்.
தலைவர், சிறுவிவசாயிகள் பாசன சங்கம், நாமக்கல்.
இ.கோ/உ.ந.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

## நிபந்தனைகள்

1. அரசின் முன் அனுமதியின்றி நீர் இறைக்கும் மின்மோட்டாரின் குதிரை சக்தியை எப்போதும் மாற்றக் கூடாது;
2. சங்கமானது புறம்போக்கு நிலங்களில் பைப் லைன் போடுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட துறையின் முன்அனுமதி பெற வேண்டும். மேற்கண்ட வேலையானது அத்துறை அலுவலர் முன்னிலையில் நடைபெற வேண்டும்;
3. பொதுப்பணித்துறை முன் அனுமதியுடன் நீர்ரேற்ற இணைப்பு மற்றும் நீர் பங்கீடு போன்ற பணிகள் சங்க செலவிலேயே செயல்படுத்தப்பட வேண்டும்;
4. காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் விடும் காலத்தில் மட்டும் நீரேற்றம் செய்யப்பட வேண்டும் (ஜுன் மத்தியிலிருந்து ஜனவரி முடிய) அல்லது அரசின் ஆணைக்கேற்ப);
5. இடத்தின் தன்மையையும் அனுமதி வழங்கும்போது நீர் பாசனம் செய்யயிருக்கும் நிலப்பரப்பினையும் கருத்திற்கொண்டு நீரேற்றும் இயந்திரத்தின் திறனை கண்காணிப்புப் பொறியாளர் நிர்ணயம் செய்வார். நீரேற்றம் செய்யும் இயந்திரத்தினை சங்கம் தனது சொந்த செலவில் அமைக்க வேண்டும். இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவுகளை சங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும்;
6. புறம் போக்கு நிலங்களில் பைப் லைன் அமைக்கும் பாதை வரியினை அரசுக்கு செலுத்துவதுடன் அப்பகுதிக்கான உள்வரி அதற்குண்டான மேல் வரிகளை காலதாமதம் இல்லாமல் செலுத்த வேண்டும்;
7. கால்வாய் மற்றும் ஆறுகளில் நேரடியாக நீரேற்றம் செய்யாமல் நிர்ணயிக்கப்பட்ட கிணறுகளிலிருந்துதான் நீரேற்றம் செய்ய வேண்டும்;
8. நீர் ஏற்றம் இயந்திரம் அமைக்கும் போதும் மற்றும் ஆயக்கட்டுகளை எந்நேரத்திலும் முன்அறிவிப்பின்றி பொதுப்பணித்துறையும் மற்றும் வருவாய்த்துறை பார்வையிட உரிமையுண்டு;
9. மேட்டூர் அணை நீர் திறப்பு கால்வாய்களில் மட்டும் நீரேற்றம் செய்யபடும் என்பதை உறுதிபடுத்தப்பட வேண்டும்;
10. எக்காரணத்தைக் கொண்டும் அரசு அனுமதிக்கப்பட்ட நீர் பாசன ஆயக்கட்டை விட மிகுதியாக நீர்பாசனம் செய்யக்கூடாது. சரியான நீர்பாசன பகுதி அறிய ஒவ்வொரு ஆண்டும் கூட்டு அஜீமர்ஸ் எடுக்கப்பட வேண்டும்.
11. எவ்வித முன்னறிவிப்பு இன்றியும் எந்தவித நஷ்ட ஈடுயில்லாமலும் கொடுத்த அனுமதியை இரத்து செய்ய அரசுக்கு அதிகாரம் உண்டு;
12. மேட்டூர் அணை திறப்பு இல்லாத காலத்தில் தண்ணீர் எடுக்கக் கூடாது;
13. இயந்திரத்தால் நீரேற்றம் செய்யப்படும் நீர், பாசனத்திற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்;
14. நிபந்தனைகளை மீறினால் சங்கம் அபராதம் செலுத்த வேண்டும். அனுமதிக்கப்பட்ட ஆயக்கட்டை விட தவறான பாசனம் மேற்கொண்டால் விதிகளின்படி அபராதம் விதிக்கவும் தண்ணீர் தீர்வையை முதல் தடைவக்கு இரண்டு பங்காகவும், இரண்டாவது முறைக்கு ஐந்து பங்காகவும் மூன்று (அ) நான்காவது முறைக்கு பத்து மற்றும் இருபது பங்காகவும் அபராதம் விதிக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் உண்டு. விதிமுறைகளை மீறினால் கண்காணிப்புப் பொறியாளர் ரூ.10,000/—க்கு மிகாமல் அபராதம் விதிக்கவும் அல்லது நீரேற்றம் அனுமதியை தற்காலிகமாக நிறுத்தவும் அதிகாரம் உண்டு. அனுமதியை இரத்து செய்யும் காலங்களில் சங்கம் / நிறுவனம் செய்த வேலைக்கு நஷ்ட ஈடு கோர உரிமையில்லை. மேற்கண்ட மாவட்ட ஆட்சியர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர் ஆகியோர்களின் ஆணையை எதிர்த்து முதன்மை செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையருக்கு மேல்முறையீடு செய்யலாம். சங்கம் தனது பதிவை, ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்து அதன் நகல்களை செயற்பொறியாளர் / உதவி செயற்பொறியாளர் / உதவி பொறியாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

15. தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் பொதுப்பணித்துறைக்கு மேட்டூர் அணை திறப்பு இல்லாத காலத்தில் நீரேற்றம் செய்தால் மின் இணைப்புகளை துண்டிக்க ஆட்சேபணை இல்லையென்றும் சங்கம் உறுதியளிக்க வேண்டும்.
16. வறட்சி மற்றும் காவிரியில் நீரில்லாத காலத்திலும் தண்ணீர் எடுக்கக் கூடாது.
17. மேட்டூர் அணை மூடப்பட்ட காலத்தில் தண்ணீர் எடுக்கக் கூடாது.
18. நீர் பாசனத்திற்காக அணையிலிருந்து தண்ணிர், திறந்து விடப்படும் காலங்களில் மட்டும் நீர் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சு.இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்